ஓலை 185| ஓசை 308| ஆகஸ்ட் 2026






# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிஞரேறு வாணிதாசன்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உற்றுப படுபவர்.

## பொருள்

தோல்வி வந்தாலும் மனம் தளராமல் தொடர்ந்து முயற்சி செய்பவர்கள், தங்களுக்கு எதிராக இருக்கும் விதியைக்கூட தோற்கடித்து வெற்றி பெறுவார்கள்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847


அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன்**
**குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

**அகர முதல இலக்கியப் பேரவை**

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# விடையில்லா வினா (எண்சீர் மண்டிலம்)




தொன்மைநிறைந்த செம்மொழியாம் தமிழை யின்று,
தொலைத்தவர்யார்? உலகமாண்ட தமிழ ரின்று
இன்றெங்கும் ஏதிலியாய் மாற்றி னர்யார்?
எந்தெந்த நாடுகளோ விடுத லையால்
குன்றெனவே நிமிர்ந்துநிற்க தமிழீ ழத்தைக்
குழித்தோண்டிப் புதைத்ததுயார்? தகுதி யற்றப்
பின்வந்த மொழியெல்லாம் ஆட்சி யாள
பைந்தமிழைப் புறக்கணித்த பேடி யர்யார்?

கல்வியிலே, கோவிலிலே, மற்ற மற்றக்
கணக்கற்றத் துறைதோறும் தமிழை நீக்கிப்
பொல்லாத பிறமொழியைத் திணித்த வர்யார்?
பாடுபட்டும் பஞ்சைகளாய் ஏழை தம்மை
தொல்லையிலே தொழுவமாடாய் விட்ட வர்யார்?
செல்வராக ஒருசிலரை வசதி யாக
வல்லவராய் வாழ்வதற்கு விட்ட வர்யார் ?
வினாயிவைக்கு விடைகாண்போர் யார்யார்? கேட்போம்!



பாவகை : இன்னிசை வெண்பா

வாழ்விலே மேம்பட வாட்டம் அகன்றிடத்
தாழ்விலே நம்பிக்கை தைரியம்  கொண்டிடக்
காழ்ப்பகற்றி வாழக் களிப்புடன் முன்னேற
ஆழ்ந்தறிந்தோர் கூற்றை  ஆள்.



கவிஞர் செ. கலைவாணி

# வாழ்க்கை

## பாவகை : குறள் வெண்பா

1) ஒருநாள் சுவாசிக்கும் ஒவ்வொரு பூவும்
அருமை உயிரின் அகம்

அகம் - ஞானம்

2) ஒன்றை இழந்துபின் ஒன்றை அடைவதே
என்புதோல் வாழ்வின் இயல்பு

3) உடைந்தக் கலத்தில் உலையேற்றி அன்னம்
படைத்தலான வாழ்நிலைப் பாழ்



4) பலவும் பலவாறு பல்பொருளாய் வாய்க்க
உலவும் உடல்கொள் உயிர்

5) வச்சை வகையற்று வந்திடின் நெஞ்சோடு
வச்சிரம் ஏற்றாயின் வாழ்வு

(வச்சை - பழிச்சொல். வச்சிரம் - உறுதி )

6) நகையும் நவையும் நடுவாய் நயப்பின்
பகையாகும் பங்கப் பயன்

நவை - இகழ்ச்சி

7) விடைகளே இல்லா வினாத்தாளாய் வாழ்க்கை
உடைத்து நுழைதல் உயர்வு

8) வினாடித் தவறின் விளைவு வருமா
குனைகொள் யுகத்தினது கூற்று

கவிஞர் ஜமுனா ஜெகன், நாகர்கோவில்

# பித்தன்

பிதற்றிக்கொண்டே
போகிறான் பித்தன்.

அவன் பிதற்றல்
வேடிக்கையாக இருக்கிறது
பலருக்கு.

அவனுக்கு அது
வாடிக்கை.

உருத் தெரியாத
சோகமொன்று இப்படி
ஆட்டி வைக்கிறது அவனை.



அச்சோகம்
துறந்தோடும் காலத்தில்,

நடைப்பிணத்திலிருந்து
நாகரிக மனிதனாய்
மாற்றம் பெறக்கூடும் அவன்.

வாடிக்கை
வேறொருவர்
பிடியில் அகப்படலாம்.

வேடிக்கை மனிதர்களும்,
உருவமும் நிறமும் கூட
அப்போது
முழுவதுமாக
மாறிடலாம்!

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# பெண்ணின் வலி

முன்னேற்றம் என்று உலகம் பேசுகிறது,
ஆனால் பெண்ணின் மனம்
இன்னும் மௌனமாகவே அழுகிறது.

கல்வியில் உயர்ந்தாள்,
வேலையில் சாதித்தாள்,
விண்வெளியையும் தொட்டாள்;
ஆனால் அவள் கண்ணீரைத் துடைக்க
இன்னும் பல கைகள் வரவில்லை.

உரிமைகள் சட்டங்களில் எழுதப்பட்டன;
மரியாதை மட்டும் சில மனங்களில் எழுதப்படவில்லை.

வெற்றி பெற்ற பெண்ணைக் கூட
விமர்சனம்தான் முதலில் தேடுகிறது
இந்தச் சமூகம்.



இருளை வென்று
விடியலை உருவாக்கும் பெண்,
தன் வலியை மறைத்து,
மற்றவர்களின் வாழ்க்கையில்
ஒளி ஏற்றுகிறாள்.

முன்னேற்றம் என்பது
பெண் உயர்ந்த பதவியில் இருப்பது மட்டுமல்ல;
அவள் பயமின்றி,
மரியாதையுடன்,
சுதந்திரமாக வாழும் நாளே
உண்மையான முன்னேற்றம்.

கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# கல்வி ஒரு அமுத சுரபி

ஓட்டைக் குடிசையில் நீ வாழ்ந்தால் என்ன?
உடைந்த இல்லம் இருந்தால் என்ன?
பணமின்றிப் பிறந்தால் என்ன?
நாட்டில் நயம்பட வாழக் கற்றிடு.

வெள்ளம் கொண்டு செல்லாதது படிப்பு;
வெந்த நெருப்பிலும் என்றும் வேகாதது கல்வி.
கொள்ளையர் களவாட முடியாதது கல்வி;
கொலைக் குணம் தராதது படிப்பு.

சகதியில் நீ விழுந்தால்
தப்பிக்க வழி சொல்லும்;
சங்கடம் நீ கொண்டால்
சமரசம் சொல்லும்.



திருக்குர்ஆன் படித்தவன்
திருடவே பயப்படுவான்.
திருக்குறள் கற்றவன்
திருந்தியே வாழ்ந்திடுவான்.

பகவத்கீதையை அறிந்தவன்
பாவச்செயல் செய்யமாட்டான்.
பைபிளை அறிந்தவன்
பகைவர்களைத் திருத்திடுவான்.

சங்க இலக்கியம் கற்றவன்
வாழும் முறையை அறிந்திடுவான்.
இலக்கணம் கற்றவன்
எழுத்தில் பிரகாசிப்பான்.

தமிழைக் கற்றவன்
தலைநிமிர்வான்.
ஆங்கிலம் அறிந்தவன்
அயல்நாட்டில் சமாளிப்பான்.

இல்லாமை இருந்தாலும்
இலவசமாகக் கற்றிடலாம்.
பொல்லாதவன் கற்றால்
நல்லவனாவான்.

தெருவில் திரிந்தவன்
தெய்வப் பிறவியாவான்.
கல்வியால் மாடு மேய்த்தவனும்
மகாராசனாவான்.

கல்வி ஊற்றுக் கிணறு;
தோன்றத் தோன்ற ஊறும்.
கல்வி ஒரு அமுத சுரபி;
அள்ள அள்ளக் குறையாது.

கல்வி ஒரு அழகியப் பாட்டு;
எவரும் பாடலாம்.
கல்வி ஒரு அழகியக் காற்று;
நம் வாசல் வர,

படிப்போம்! உயர்வோம்!

கவிஞர் ரெஜினாபானு, மேலூர்

சொல்லிய சொல்லுக்கும்,
சொல்லப் போகும்

அடுத்த சொல்லுக்கும் இடையே,
நெருடலாக;

அது

ஒரு நொடியா?
ஒரு யுகமா?
இடைவெளி கடினம்.

சொல்லும் நேரம் தவற,
சொல் தடுமாற,

சொல்லும் பொருளும் மாற்றம் அடைய,
சொல் மாறி வரும் நாவில்.

சந்தி

பொருந்தா சந்தியில்
சந்தி சிரிக்க;
சொற்கள் தனித்தனியாக;

சந்தியின் சந்தியில்
என் சொற்கள்.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

கல்விப் பயணம்
காரணங்களோடு முற்றுப் பெற.

வெளிவாரி நெறியோ
காலத்தால் ஓய்வெடுக்க.

அரச பணிக் கனவு
அடியோடு கலைந்து போக.

மீசைக்குமுன் முளைத்த காதல்
வீரச்சவால் விட.

நிழலாய் கூடவிருந்த
தோழர்கள்கடல் தாண்டி கால் பதிக்க.

காலம் என்னையும் கதற வைத்தது.
கடவுச்சீட்டோடு கட்டாரில் காசுக்காக!



கவிஞர் அனஸ் பரீட், கல்ஹின்னை (இலங்கை)

# வண்ணமில்லா எண்ணங்களில்



சலசலப் பேச்சினில்
சிலுசிலுக்கும் இதயம்.
குளுகுளுவென ஆனது
நளினமான என்னவளாலே.

தகதக மேனியும்
தள்ளாடுது நடையினிலே.
குறுகுறு பார்வையில்
சிலிர்ப்பானது உள்ளம்.

பளபளப்பான பற்களும்
கலகலவெனச் சிரிக்குதே.
படபடப்பான நெஞ்சமும்
கிடுகிடுவெனத் துடிக்குது.

திடுதிடுவென மாறுது வானிலை;
சடசடவென மழையாகப் பொழியுது.
கமகமக்குது மல்லிகையும்
கன்னி, உன் கூந்தலிலே.

பரபரக்கும் மனது
கதகதப்பானது உன்னாலே.
கடுகடுப்பாக இருந்த நானும்
சிடுசிடுப்பை மறந்தேனே.

கிறுகிறுப்பானேன் உன்னழகிலே;
மடமடவென மயங்கினேனே.
சுறுசுறுப்பானேன், கண்ணே;
குடுகுடுவென வந்தேன் உன்னருகிலே.

வண்ணமில்லா எண்ணங்களில்
வஞ்சியும் நிறமானாயே.
பளிச்பளிச் மின்னலில்
தேகமும் ஒளிருதே.

மளமளவென என்னுள் மாற்றம்,
மங்கையே, உன்னைக் கண்டதுமே.
விறுவிறுவென வந்துவிடு;
வியப்பினைத் தந்துவிடு.

வெதுவெதுப்பாய் அணைத்திடு;
வெட்கமது மறைந்திடவே.
இணைந்தே இருந்திடு
இரட்டைக்கிளவிச் சொற்களாய்.

பிரியாதிரு என்னை;
மறவாதிரு காதலையே.
கைகோர்த்து நடந்திடுவோம்
வாழ்க்கையெனும் பாதையில்
இனிமையாகவே.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# உலகை மறக்கிறாள்

அன்பினால் அணைத்து,
இன்பத்தில் இணைந்து,
துன்பத்தில் துணைபுரிந்து,
புன்னகையில் பூரிப்படைந்து,
துயரத்தில் தோள் கொடுத்து நின்று,
இல்லற வாழ்வில் ஈடுபட்டு,
சிசுவைப் பெற்றெடுக்கிறாள்.

பூ போன்ற பாதங்களைத் தழுவி
பேரின்பம் கொள்கிறாள்.

கண் சிமிட்டினால் விழிக்கிறாள்;
கால் அசைந்தால் தொடுகிறாள்;
அழுதால் மனம் பதறுகிறாள்;
சிரித்தால் ரசிக்கிறாள்.

அவளின் அசைவுகளை
உற்று நோக்குகிறாள்.

அவளையே நினைத்து
உலகத்தையே மறக்கிறாள்.




கவிஞர் மா. மோனிஷா

தளிர் அறுக்கும் வேலியாய் கொற்றவன்
தலைமுறை சுமை நீக்கும் கல்வி
தண்டல் ஈந்து கற்கும் சூழல்
தன்னுரிமை இழக்கும் தளிர்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு



இவனது சிறகுகள்
பிடுங்கப்பட்டு, தினந்தோறும்
பறக்க நிர்பந்திக்கப்படுபவன்.

குடும்பம் காக்க
பல்வேறு முகமூடிகளை
நாள்தோறும் அணியும்
பாவப்பட்டவன்.

தனது நாட்களை மறந்து,
பிறருக்காக அம்புகளைச்
சுமக்கும் வேதனையானவன்.

தனது கால்கள் காயம்பட்டாலும்,
குடும்பத்தின் பாதங்களைத்
தாங்கும் எளிமையானவன்.

மரணம் வரை சிலுவை
சுமந்து, தினந்தோறும் உயிர்த்தெழுந்து
பிணமாய் நடமாடுபவன்.

தனது சந்தோஷங்களைத் தொலைத்து,
மற்றவர்களின் மகிழ்ச்சிக்காக
மறைந்து நிற்பவன்.

எப்பொழுதும் தன்னைத் தொலைத்து,
தேவைக்குத் தேடப்படும்
முகங்களாய் வாழ்ந்து மறைபவன்.

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# ஊனம் என்பது

ஊனம் என்பது
உள்ளத்தில் இல்லை.

"என்னால் முடியும்" என
துணிந்துவிட்டால்,
நீயும் அங்கே
சாதனை படைத்திடுவாய்!

உலகம் ஆயிரம் சொல்லும்;
அங்கே நீயே
உன்னை நிரூபித்துவிடு.

"என்னால் முடியும்!" என
உன்னிடம் மறைந்து நிற்கும்
திறமைகளை
மறைத்துவிடாதே!

உலகம் ஆயிரம் சொல்லட்டும்;
உனக்கு நீயே நீதிபதி!

"மாற்றுத் திறனாளி"
எழுந்து
மாற்றிட வேண்டும்
சமூகத்தினை!

ஒதுக்கப்பட்ட நிலை மாறி,
ஒவ்வொருவருக்குமுள்ள
திறமைகளை உயர்த்திட வேண்டும்!



என்னால் முடியும்!
எழுந்து நடைபோடு;
நீயும் அங்கே
ஒரு அறிவாளிதான்!

கவிஞர் திருமதி. ஜூனிற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

# தொடர்வண்டிப் பயணம்

காரிருள் மூழ்கிய வானத்தில்
நிலவொளிபோல் அவளழகம்.
தாமரை இதழ்போல் அடியெடுத்து
வைத்தாள் தொடர்வண்டியில்.



கண்டேன்! வியந்தேன்!
சன்னலோர இருக்கையில்
அமர்ந்த பேரழகின்
மேனியை வருடிச் செல்ல
புயலாக மாறிய காற்றையும்
தடுத்தேன்; என்னவளை
என்னைத் தவிர வேறு யாரும்
வருடக்கூடாதென்று.


செல்லுகின்ற வழியெல்லாம்
மரங்களும் தாவரங்களும்
எட்டி எட்டிப் பார்த்தன,
அவளின் காந்தப் பார்வையினால்.

மின்சாரத் தொடர்வண்டிகூட
என்னவளால் மின்சாரமின்றி
பயணத்தைத் தொடர்ந்தது.

சடுகுடு சடுகுடு என வண்டியின்
சப்தம்கூட அவளின்
குயிலிசை போன்ற
பேச்சால் காணாமலானது.

கவிஞர் குணா, மகாராஜபுரம்

# காதல் பொய்கையே



கொஞ்சும் தமிழில்
சில நாழிகை உரையாட
வா, பைங்கிளியே.

பாவலனாய் நான் மாற,
கவிதையாய் வந்துவிடு,
தேன்மொழியே.

அற்றைத் திங்களின்
ஒளியை நின்
கரங்களில் வைத்திடுவேன்.

ஆயுள் தீரும் நாள் வரை
ஆராரோ பாடி,
நின்னைத் தாலாட்டிடுவேன்.

செங்காந்தள் மலர் பறித்து,
காதலே, நின் கூந்தலில்
சூட்டிடுவேன்.

செந்தூரக் குங்குமத்தை
நின் நெற்றியிலே
இட்டிடுவேன்.

பொன் மஞ்சள் கயிற்றில்
தங்கத் தாலி கோர்த்து,
வெண் சங்கு கழுத்திலே
பூட்டிடுவேன்.

யுகங்கள் கடந்தும்,
நானும் நீயும்
நாமாகி வாழ்ந்திடவே.

காதல் மதுரமே,
நின் இதழ்த் தேன் பருகி,
நின்னுள் நான்
கரைந்திடவே.

ஒரு முறையே
நின் செவ்விதழ் மலர்ந்து,
"சம்மதம்..." என்ற
முத்தை உதிர்த்துவிடு.

கவிஞர் க. கார்த்திகா மணிகண்டன், கோவை

# ஒற்றைச் சிரிப்பு

வழக்கமில்லாத வழக்கமாக,
நோன்பிருப்பதைப் போல,
இப்போதெல்லாம் அதிகக் கவனத்துடன்
அனைத்தையும் செய்து கொள்கிறேன்!

அடர்ந்த மரத்திலிருந்து கை நழுவி,
காற்றோடு கலந்திட முனையும்
ஒரு பழுத்த இலையின்
பரிதவிப்பு என்னுள் தொற்றிக்கொள்கிறது!



பிடி நழுவியதும் கட்டுத்தரைவிட்டு
வெகு முனைப்புடன்
துள்ளி எழும் இளங்கன்றாய்,
என் மனப்புயல் உன்னைச் சுற்றியே
வலிய வட்டமிடுகிறது!

இருக்கட்டுமெனவோ,
இவண் இம்சைகள் எனவோ,
எதற்கும் இடம் தராமல்,
பொல்லாத இருளை
பொழுதுபோக்காய் எனக்கு அனுப்பிவைத்த நீ,
புறப்பட்டுவிட்டாய்...!

ஆனால்,
அடங்க மறுத்த அலையாய்,
உடைய மறுத்த சிலையாய்,
புனைய மறுத்த முகிலாய்,
போர்க்குணத்துடன் புறப்பட்ட என் நேசம் மொத்தமும்
சுவரில் அறைந்த பந்தாய்,
நீ கடந்த பாதையில்
நகர்வலம் நடத்தி நாட்களைக் கடத்துகிறது!

என்றேனும் ஒருநாள்,
இடம் மாறும் பறவை
இரவலாய் இறகொன்று
தருமென்ற நம்பிக்கையின் பிடியில்
என் காதல் நந்தவனம் வளர்கிறது!

புரியாத வழியில் புறப்பட்ட பின்பே,
அறியாத மொழிதானே
இங்கு அரிச்சுவடி!

என் வாழ்வென்னும் கோப்பையில்
நான் தேதி குறிப்பிடாமல்
தேக்கிக் கொள்ளும் தேன் நீ!

பழகாமல், பருகாமல்,
பாதுகாத்த பின்புதான்
தேனே, உன் மகத்துவம் குறித்து
மருத்துவம் பேசுகிறது!

அதனால்,
கணக்கற்றுக் கரையட்டும்
என் பொழுதுகள்!

வழக்கற்று ஒழியட்டும்
என் வறுமைகள்!
திக்கற்றுத் திரியட்டும்
என் தேடல்கள்!

எல்லாம் கடந்து, எதிர்க்காற்றின் முனை முறிந்து,
வழக்கொழிந்த வரிசையில்
வந்தமரட்டும் உன் சிநேகம் படிந்த
அந்த ஒற்றைச் சிரிப்பு!

அதுவரை வலசையாய் பறக்கட்டும்
வாசல் மறந்த என் மனப்பறவை!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

கண்ணோடு கண்ணின் காதல் மொழி பேசும்;
நெஞ்சோடு நெஞ்சம் நினைவில் உருகும்.

வார்த்தை வராமலே வாழ்வு நிறையும்;
தூரம் வந்தாலும் துணை நீயே ஆக.

காதல் என்பது கண்ணில் தொடங்கும்;
கருத்தில் வளர்ந்து நெஞ்சில் குடியேறும்.

சொல்லாமலே புரியும் மொழி அது;
கேட்காமலே கேட்கும் இசை அது.

இரவைப் பகலாக்கும் ஒளி அது;
தனிமையைத் துணையாக்கும் மருந்து அது.

ஒரு பெயரில் உலகம் அடங்கும்;
ஒரு பார்வையில் காலம் நிற்கும்.

பிரிந்தாலும் சேரும் நம்பிக்கை அது;
சேர்ந்தாலும் பிரியப் பயக்கும் வலி அது.



கவிஞர் ஏ. எம். முர்ஷிதா, அக்குரனை (கண்டி)



கன்னத்தில் அழுகையின் தடம்.
இரவின் சண்டை,
காலையில் மௌனம்.

தன்னவனின் முகம் காணாமல்
வேலைகள் செய்தாள்.

வெளியே செல்லும் போது,
மனைவியின் நெற்றியில் முத்தமிட்டு,
"வரட்டுமா?" என்றான் கணவன்.

வார்த்தைகள் இல்லாத சமாதானம்,
நீ கொடுக்கும் ஒற்றை முத்தத்தில்.

கவிஞர் கி. கரோலின்மேரி, புதுச்சேரி

# அருணகிரிநாதர்

அருணையின் மைந்தர்களுள் ஆகச் சிறந்த ஒருவராம்;
அன்னைத் தமிழிலும் வடமொழி தன்னிலும்
ஆன்ற புலமை பெற்றவராம். அகிலமிதில்
ஆண்டவன் கொடுத்த பெருஞ்செல்வத்தைத் தன்னிலை மறந்து
ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி, அனைத்தையும் தொலைத்தவராம்.
அன்னவருக்கும் இரக்கம் காட்டி வாழ்ந்திட வழியும் காட்டிய
அழகன் முருகனின் அடிமையாய் மாறி வாழ்ந்த அருணகிரியை
அடியேன் எந்தன் அன்னைமொழியில் பாடுதல் என்பது என் நல்கொடுப்பினையே!



அருணகிரியை அவனிக்கு ஈன்றளித்த இணையர்கள்
திருவெங்காட்டர், முத்தம்மை என்று சொல்வோருண்டு.
தந்தையார் பிள்ளை பிறந்த கொஞ்ச நாளிலே நற்கதியடைய,
அக்காவால் அவர் செல்லத்துடன் பேணி வளர்க்கப்பட்ட பிள்ளையாம்.
அருணகிரி விலைமகள்களுடன் வாழ்ந்த வாழ்வால் நோய் வரப்பெற்று,
பொருளிழந்து, மானமிழந்து வாடிய வேளை அக்காவிடம்
பொருள் வேண்டி நின்ற நாளில், "என்னை விற்றுப் பொருள் ஈட்டி,
அருணகிரி, நீ வாழ்க!" என்று சொல்லிய சொல் தன் நெஞ்சைச் சுட,
அருணைக் கோபுரம் மீதேறி, "தான் வாழ்ந்த வாழ்வு போதுமென்று"
ஆருயிரை விட்டுவிட தரை நோக்கி வீழ்ந்தபோது,
அன்புடனே தன் இரு கையால் தாங்கித் தடுத்தாண்டார் எந்தன்
தண்டமிழ் இறைவன், தமிழுக்காய் முதல் ஓடி வரும் முருகன்!

தகப்பனுக்குப் பாடம் சொன்னவன், அருணகிரிக்கும் குருவாகி,
அகமகிழச் செம்மையாக "சரவணபவ" மந்திரம் அருளிட,
அன்றவர் புண்ணியரானார்; அதன்பின் பெரும் புலவருமானார்!
ஆண்டவன் முருகன் அருளை அனைவரும் பெற்றிட,
அவர் அருளியது திருப்புகழே; அதற்கொப்பதோர் நூல் பிறிதில்லை இன்றுமே!
கந்தரனுபூதி, கந்தரலங்காரம், திருவகுப்பு ஆகியவற்றையும்
எந்தைக்குப் பாமாலையெனச் சூட்டி மகிழ்ந்தாரே!
பந்தம் நமக்கு முருகன் மட்டுமென உணர்த்தி,
பாரத நாட்டுத் திருக்கோயிலுறை முருகனை மட்டுமின்றி, இலங்கை
பணிந்து ஏத்தும் கதிர்காமத்தானையும் போற்றிப் பாடினாரே!

<u>திருப்புகழ் பாடல் 114.</u>

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
　　ஆறுமுகம் ஆறுமுகம் ...... என்றுபூதி
ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
　　யார்கள்பத மேதுணைய ...... தென்றுநாளும்
ஏறுமயில் வாகனகு காசரவ ணாஎனது
　　ஈசஎன மானமுன ...... தென்றுமோதும்
ஏழைகள்வி யாகுலமி தேதெனவி னாவிலுனை
　　யேவர்புகழ் வார்மறையு ...... மென்சொலாதோ

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# உறைந்த நதி



இரைச்சல்கள் காதைக்
குடைந்தாலும்,
யாரும் பயணிக்காத தனி உலகத்தில்

என்னைச் சீர்செய்ய
முயன்றவளாய்ப்
பயணிக்கின்றேன் நான்.
காந்தமாய்த் தன்பால் இழுக்கும்
கடந்த கால வடுக்கள்.

வேண்டிப் பெறாவிட்டாலும்,
கடமையெனும் போர்வைக்குள்
கட்டுண்ட சுமைகள்.

பல கரங்கள் நிழலாய்
உடனிருந்தும்,
திக்கற்று
நான் தவித்த சூழ்நிலைகள்...

நம் பிழையின்றியே
நம்மை வதைத்து,
உள்ளத்திலே சுழன்று
கொண்டிருக்கும் சுடுசொற்கள்.

நிற்கதியற்று நான்
தனியாய் நின்ற பல
ஞாபகங்கள்.

வார்த்தைகள் தீர்ந்து,
வலிகளைப் புன்னகையால்
நிரப்பிக்கொண்ட தருணங்கள்.

பொய்யான உறவுகள்
ஏங்கவைத்துத் தந்த
தீராத ஏமாற்றங்கள்.

இப்படிச் சொல்லிக்
கொண்டே போகலாம்.
தனிப்பாதையில் தானே
பயணிக்கின்றேன்.

அதுதான் என்னவோ,
என்னைப் பற்றி நானே
புலம்பிக் கொள்கின்றேன்.

என்னைப் புரிந்துகொண்டவர்களுக்கல்லாமல்,
வியாக்கியானம் தேடுபவர்களுக்கு,
நான் என்றுமே
மௌனப் புத்தகம்தான்.

கவிஞர் ரஸ்னா ரம்ஸான், கண்டி (இலங்கை)

# தனித்து இருக்கிறேன்

ஒரு காலத்தில், உரிமையுள்ளவர்களிடம்
துணிந்து சென்று பேசியவள் நான்.
ஆனால் இன்று,
யாரிடமும் பேசுவதற்கே பயப்படுகிறேன்.
மாறியது உலகமா...
இல்லை, என் மனமா என்று
எனக்கே தெரியவில்லை.



இன்றும் என்றும்
பிடித்தவர் பட்டியலில்
முதலிடம் நான் வகுத்தளிக்க,
எவருக்கும் நான்
ஒரு நாளும்
முதலிடத்திலும் இல்லை.

அன்பும் அக்கறையும் நிறைந்த
பார்வையிலும் இல்லை.

ஏன் இந்தப் பிறவி என்று
பிறை தேடிப் புலம்ப,
இன்று அவனும் இல்லை;
மேகத்தால் மறைக்கப்பட்டான்.

என் வாழ்நாள் முழுதும்
காதல் வழியில்
கரைந்தும், சில கலைந்தும்,
வலியிலும் சில நாட்கள்.

கவிஞர் ச. கார்த்திகா, பழநி

# குறிஞ்சிப்பூ



வறுமையினால்
வறண்டு கிடந்த மலைப்பகுதி,
இன்று
புத்தாடை அணிந்து சிரிக்கிறது;
குறிஞ்சி பூத்திருக்கிறது.

மழையும் புயலும்
மாறி மாறி அடித்தாலும்,
மௌனித்து காத்திருந்து,
காதலால் தழுவி நிற்கும்
மலையும் குறிஞ்சி மலரும்.

கார்மேகம் கண்டதும்,
கரை தொட்ட நுரையைப் போல
துள்ளியாடும் மயிலின்
வண்ணத்தை அணிந்து,
வான் தொட்ட கானகம்
நாணி நிற்கிறது.
ஆம், காதல் பூப்பெய்து
மலை முழுவதையும்
தழுவி நிற்கின்றன
குறிஞ்சிப் பூக்கள்!

காற்றுடன் கதைத்து,
சிரித்துச் சிரித்து முகைத்து,
என் காத்திருப்பைக்
களங்கப்படுத்திவிட்டாய் என்று
கலங்கி நிற்கையில்,
உயிர் தந்தாலும், உதிர் தந்தாலும்,
உன்னில்தான் என்று
என்னில் நிறைந்தாய்;
என்னுள் படர்ந்தாய்.
சரிந்து கிடந்த என் மேல்
சாய்ந்து கிடந்த காதலே!

காத்திருப்பின் ஏக்கத்தை
காலம் சுமந்தாலும்,
குலைகுலையாகப் பூக்கும்
குறிஞ்சிப் பூக்களுக்காய்
இன்னும் காத்திருப்பேன்,
இனி ஒரு பன்னிரு ஆண்டுகள்.

கவிஞர் சி.முத்தரசன், அரியலூர்

# தெரிவதில்லை

சிறைப்பட்டுக் கொள்வது
ஏனோ தெரிவதில்லை.
ஆறாத பேச்சொன்றை மீண்டும் தொடர,
நேரமே என்னைத் தவிர்த்துச்
செல்வதும் ஏனோ தெரிவதில்லை.



பேசாமல் கடந்த ஒவ்வொரு நாளும்,
என் இதயத்தின் வெற்றிடங்களில்
பதிந்து போகிறது.

காத்திருக்கும் என் மனம்,
ஒவ்வொரு நொடியையும்
ஒரு யுகமாகக் கடக்கிறது.

உன் ஒரு வார்த்தை போதும்;
எல்லா மௌனங்களையும் உடைத்துவிடும் என்ற
நம்பிக்கையோடு,
இதயம் இன்னும் திறக்காத
வாசலோரம் காத்திருக்கிறது.

மௌனங்கள் நாளுக்கு நாள் நீள்கின்றன.
தூரங்கள் அதனோடு வளர்கின்றன.
பெருவெளி தோன்றி
மனப் போராட்டத்தைக் கூட்டுகிறது.

உன்மீதான என் நேசம் மட்டும்
காலத்தாலும் குறைவதில்லை,
தூரத்தாலும் தடைப்படுவதில்லை,
மௌனத்தாலும் காணாமல் போவதில்லை
ஒருபோதும் எதனாலும் குறைவதில்லை.

ஒருநாள் பேசுவோம்
என்ற அந்த ஒற்றை நம்பிக்கையே,
பேசாமல் கடந்த எத்தனையோ நாட்களை
இன்றும் உயிரோடு சுமக்கிறது.

தெரிவதில்லை
காத்திருப்பது வலியா
அல்லது, உன்னை மறக்க முடியாத
இந்த மனம் சுமையா?

இரண்டிற்கும் விடை மட்டும்
இன்றுவரை தெரிவதில்லை.

கவிஞர் தூரிகை, இலங்கை

அன்று அவளை கண்டவுடன்
கலியுகம் கண்டேன்
அன்று அவளை கண்டேன் வென்றேன்
அனைத்தையும் விற்றுக் கொண்டேன்
இன்று யாரோ யார் அவளோ.



கவிஞர் ம. செல்லமுத்து, பெரம்பலூர் மாவட்டம்

# ஆராதித்திரு

விழுந்த பிறகுதான்
எழுந்து நிற்க
பலம் கிடைத்தது.

தொலைந்த பிறகுதான்
தேடலில்
நம்பிக்கை பிறந்தது.

புறக்கணிப்பின் பின்னரே
வெற்றியில்
வெறி பிடித்தது.

அவமானத்தின் அடுத்ததாகத்தான்
அதிக முயற்சி
முட்டி வெளிப்பட்டது.

ஏழ்மையின்
இயலாமையில்தான்
அயரா உழைப்பில்
உத்வேகம் பிறந்தது.

ஆதலால்,
துயர்காலங்களை ஆராதித்திரு.

திருக்கால விதானம்
தடை விலகித்
திறக்கும்.



கவிஞர் ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# கனவே! நீ!



கனவே, நீ
மூடிய விழிகளுக்குள்
மூன்றாம் உலகப் போர் நடத்துகிறாய்.

விடிந்ததும் இமைகளை
விட்டு வெளியே பறக்கும்
கனவுப் பறவையே நீ.
விழிகளைக் களவாடிச்
செல்வதில்லை.
இதயத் தோட்டத்தில் பூத்த
நிம்மதிக் கனிகளை அல்லவா
கொத்திவிட்டுப் போகிறாய்!

உனது வருகையின் வேறுபாட்டால்
வாழ்க்கையும் மாறுபடுகிறது.
ஏழைகளிடம் வரும்போது
பசியாகவும் வறுமையாகவும் வருகிறாய்.

வசதியுள்ளவர்களிடம் வரும்போது
பணமாகவும் நகையாகவும் வருகிறாய்.
முப்பத்தாறு வயது முதிர்ந்த கன்னியிடம்
கனவில் கல்யாணமாக வருகிறாய்.

திருடர்களிடம் வரும்போது
கள்ளச் சாவியாக வருகிறாய்.
வேலை இல்லாத பட்டதாரிகளிடம் வரும்போது
வேலையாக வருகிறாய்.

அரசியல்வாதிகளிடம் வரும்போது
பதவியாக வருகிறாய்.
மருத்துவர்களிடம் வரும்போது
நோயாளியாக வருகிறாய்.



முன்னேற்றத்தின் முதுகெலும்பாய்
எப்போது வரப்போகிறாய்?
கேள்விக்குறியான நாட்டை
ஆச்சரியக்குறியாக மாற்ற எண்ணும்
நல்லவர்களிடம்
வெற்றியாக எப்போது வருவாய்?

நம்பிக்கை வயலில்
முயற்சியை விதைத்துவிட்டு,
முன்னேற்றத்தை அறுவடை
செய்யக் காத்திருப்பவர்களிடம்
கலையாத மேகமாய் எப்போது வருவாய்?

கைகளால் அள்ளி,
இதயத்தால் வழங்கும்
அமுதசுரபி மனம் கொண்ட
நல்லவர்களிடம்
செல்வமாய்
எப்போது வருவாய்?

கவிஞர் முனைவர் அ.ச.மு.முனியாண்டி

# என் வாழ்வின் உந்துசக்தி நீ!

நான் வீழ்வதற்குப் பலர்
காரணமாக இருக்கலாம்.
ஆனால் நான் எழுவதற்குக்
காரணம் நீ மட்டுமே.

யாராலும் ஈடு செய்ய
முடியாத அன்பைத் தந்து,
தன் முகச்சோர்வைப் போக்கி,
என்னைச் சிரிக்க வைத்து
அழகு பார்க்கும் ஓர் உறவும் நீயே!

எனக்குக் கிடைத்த இன்னொரு
தாயும் நீயே!



தவறு செய்தால் தண்டித்து,
நேர்வழிப்படுத்துபவளும் நீயே!

தினம் தினம் துடிக்கும்
இதயத்துடிப்பைப் போல்,
என்னைத் தினம் தினம்
நினைக்கும் ஓர் உன்னதமான
உறவும் நீயே!

என் சகோதரி

கவிஞர் காஜா முகைதீன் பாத்திமா றிம்ஸியா, மூதூர் -01

# அந்தியின் அகவறைகள்



அந்தி, ஒளியும் இருளும் இணையும் தருணம்;
வாழ்க்கை நம்பிக்கைகள் மறைந்து பிறக்கும்.

மனம், மௌன மொழிகள் சுமக்கும் பயணம்;
கண்ணீரும் புன்னகையும் சந்திக்கும் எல்லை.

நினைவுகள் நிழல்களைத் தழுவும் நேரம்;
கனவுகள் விடியலைத் தேடும் பாதை.

வலிகள் வலிமையாய் மாறும் கணம்;
இதயம் சொல்லாத மொழிகள் வாழும்.

நம்பிக்கை இருளிலும் ஒளிரும் தீபம்;
அன்பு காயங்களையும் ஆற்றும் மருந்து.

மௌனம் ஆன்மாவின் உண்மை மொழி;
அந்தி வாழ்க்கையின் அழகிய உருவம்.



கவிஞர் திருமதி சினேஹா வினய்

# இன்னும் ஞாபகமிருக்கிறது

இன்னும் இருக்கிறது தான்
நேசத்தைச் சொல்லும் அந்த
லிகிதம் இன்னும் இருக்கிறது.

பழுப்பேறி, வயது முதிர்ந்து,
மடிப்புகளூடே கிழிய
எத்தனிக்கும் அந்த
லிகிதம் இன்னும் இருக்கிறது.

உன்னை மறுத்தது போல்,
உன் லிகிதத்தை மறுக்க
இன்றளவும் முடிந்ததில்லை.



உன் நேசத்தின் பிரவாகம்
என் புத்தகப் பூங்காவிற்குள்
பூவொன்றாய்க் கிடக்கிறது.

எத்தனை தடவை படித்தேன்!
அத்தனை தடவைகளும் பரவசம்
அறவே குறையவில்லை.

உன் நேசத்தின் வீச்சுகளை
ஏற்றிட முடியாத அந்த
காலத்தின் மீது இன்னும்
பகைமை இருக்கிறதா?

கவிஞர் சம்மாந்துறை மஷூறா



அகர முதல

# நினைவில் வாழ்பவனே!



தொலைதூரத் தேடல்
என் வாழ்வில் எட்டிப் பார்க்கவே!

இரு உள்ளங்கள் சேரும்
அழகிய காலங்களை வேண்டியே.

கண்கள் தேடும் ஒவ்வொரு விடியலும்
காலைப் பொழுதுகளிலும்,

மறையாமல் போகும் நினைவலைகள்
என்னையும் வந்து சூழவே!

கனவிலும் துணையைக் காணத் துடிக்கும்
தூங்கா ஆழ்ந்த இரவுகளுமே!

வரைய நினைப்பது அந்தக் கண்களின்
ஒற்றைச் சித்திரமே!

அரவணைக்க ஆசைதான் இருப்பினும்,
இதயம் கூறுவது அவனையே!

காத்துக் கொண்டு நிற்பது
வரும் நாளை வேண்டியே!

கவிஞர் ஸபா நளீர், கண்டி

# வாழ்வின் இனிமை!



அறம் சார்ந்த செயலெல்லாம்
இதய அன்பைப் பெருக்கிடுமே;
வாழ்வில் இனிமை சேர்ந்திடுமே.

அன்பைப் போற்றி, அன்பை வளர்க்கும்
அரிய குணம் மனிதனுக்கு
என்றும் வாழ்வில் வேண்டுமே.

நமக்கான உலகமென மதிக்காமல்,
வாழ்கின்ற சுயநலத்தை ஒழிக்கும்
குணம்தான் வேண்டும்.

உலகத்தின் அனைத்து உயிர்களுக்குமான
பூமியைப் பொன்னாய்ப் போற்றி,
கண்ணாய்க் காக்கும் குணம் என்றும் வேண்டும்.

சுற்றமும் நட்பும் சுகமான வாழ்வை
இயல்பாய்ப் பெற்று, இனிமையாய் வாழ,
மாசில்லாப் பூமியைக் கண்ணின்
இமையெனக் காத்திடல் வேண்டுமே.

பசி இல்லா உலகம் படைத்திடும் குணமே
உயர் மனிதனின் வாழ்வின் உயர்ந்த லட்சியமாய்
இருந்திடல் வேண்டும்.

இருப்பவர், இல்லாதவர் என்ற பேதமின்றி
வாழும் மனிதன் என்றும் தெய்வம்தான்;
அது உயர் குணத்தின் உயர்வுதான்.

கவிஞர் ஜேப்பி @ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# காகிதத்திற்கு ஒரு பதில்



காகிதமே!

ஏன் என்னை அழவைத்து
வேடிக்கை பார்க்கிறாய்?
உனக்கு இதயமே இல்லையா?

உன் மேனி வெள்ளை என்பதால்
இதயத்தில் ஈரமே வரவில்லையா?

என்னைப் போன்ற பதுமைகள்
உன்னைப் போன்றவர்களால்தான்
உயிர்த்தெழுகின்றனர்.

அதற்கும் முற்றுப்புள்ளி
வைத்து விடாதே.

எங்களின் உணர்வுகளை
பேனாவின் முனையால்
உன்னிடமே உதிர்த்து விடுகிறோம்.

சில நேரம்,
உனக்குப் பெருமையாகவும்
புகழாகவும் இருக்கலாம்
என்னைப் போன்றவர்களால்.

சொல்லொணாத் துயரால்
வடித்தேன் என் உள்ளக் குமுறல்களை;
என்னை மறந்து விடாதே.

அழைப்பு விடுத்திருக்கிறேன்;
பதிலைத் தருவாய்.

எனது இனிய காகிதமே,
தூய்மையான உனது இதயத்தை
கொஞ்சம் இந்தப் பக்கம் திருப்பு.

நல்லதோர் உரையினைக் கேட்டு,
மெல்லிய பண்பு படைத்த
உனது செவிகளை
கொஞ்சம் திறந்து விடு.

கவிஞர் அக்பர் ஜனுல் முன்சிலா, மருதமுனை

# வல்லமை தாராயோ!

எல்லோரும் எல்லாமும் பெற்றிடும் வகையில்
நல்லோர்கள் நாடாள வல்லமை தாராயோ!
வாடாத மனத்துடனே வாழ்வினை எதிர்கொள்ள
ஈடிலா உறுதியினை எனக்குத் தாராயோ!
உண்மையின் பாதையில் இறுதிவரை பயணிக்க
உயர்ந்த எண்ணங்களை உள்ளத்தில் தாராயோ!
வீழ்ந்தாலும் தாழ்ந்தாலும் விரைந்தெழும் துணிவை
ஆழ்மனத்தில் அடைகாக்கும் வரத்தினைத் தாராயோ!
அன்பை விதைக்கும் இதயத்தைத் தாராயோ!
அறிவை வளர்க்கும் ஆற்றலைத் தாராயோ!
போற்றும் புகழுரைகள், தூற்றும் இகழ்ச்சிகள்
இரண்டும் தாக்காத இதயத்தைத் தாராயோ!
சோதனைகள் வேதனைகள் எதிர்வர நேரிடினும்
சோர்வின்றி முயலும் வல்லமையைத் தாராயோ!
பொறுமை எனும் நற்குணத்தைத் தாராயோ!
அறியாமையை விரட்டும் அறிவொளியைத் தாராயோ!
பிறர் துன்பம் நீக்கும் கருணைவிழி தாராயோ!
தாய்நாட்டை, தாய்மொழியை உயிரினும் மேல்லாக
நேசிக்கும் பண்பை அனைவருக்கும் அருளாயோ!
தாய்நாட்டை நேசிக்கும் உணர்வைத் தாராயோ!
சொல்லாலும் செயலாலும் அனைவருக்கும் பலனளிக்கும்
வல்லமையை எனக்கருளி நல்வழியைக் காட்டாயோ!
எல்லோரும் இந்நாட்டு மன்னரென்ற உணர்வுடனே
நல்வழியில் உயர்வடைய வல்லமை தாராயோ!



கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி, புதுச்சேரி

மழையில் இலை
அசைகிறது
காகிதக் கப்பல்
**********

காகிதக் கப்பல்
மழையில் நனைகின்றது
குழந்தை
**********

மழை நேரம்
வட்டம் வரைகிறது
நீர்க்குமிழி
**********

சினத்தில் முகம்
தொட்டதும் சுருங்கும்
தொட்டாச்சிணுங்கி



கவிஞர் சேஹ் மொஹம்மது பௌஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

சூடான தேநீர்
ஜன்னலோரம்
ரசித்தல்
நனைதல்
என்பதையெல்லாம் தாண்டி
மழை
இப்போதெல்லாம்
நினைவு படுத்துவது
குழந்தைகளையும்
குடைகளையும்
மட்டுமே



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

# கல்விச் செல்வம்

கல்வி கற்பது நம் கடமை
கல்லாமை நமது பெரும் மடமை
நல்லபடி கற்றால் நல் வாழ்க்கை
இல்லா விட்டாலோ இருள் வாழ்க்கையே!

செல்வம் அனைத்திலும் சிறந்த செல்வம்
சிறப்பையே நல்கும் பெரிய செல்வம்
எல்லாம் கற்று நாம் உயர்ந்தாலோ
இவ்வுலகமே என்றும் ஒளி மயம்தானே!




நல்லதைத் தேடிக் கற்க வேண்டும்
நாளும் அறிவைப் பெருக்க வேண்டும்
எல்லோரும் இனிதே எம்மைப் பாராட்டுவர்
இன்னும் இதனாலே நனிசிறந்து உயரலாமே!

படிக்கப் படிக்கப் படிபல தெரியுமே
படிபல உயர்ந்திட விடிவே வாசல் வருமே
அடித்தாலோ, ஆசிரியர் அதையேற்று மகிழ்வோமே!
அதுவோ படியேற்றும் அடியென்றே உணர்வோமே!

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், கன்னியம்மையான், கிழக்கு மாகாணம்

# கடந்த வருடத்தின் நினைவுநாள்



ஐயனே!
கடந்த வருடம் இதே நாளில்
உன்னைத் தரிசிக்க ஜோடியாக வந்தோம்.
அடைமழையால் பாதி உருகிப் போய்
எங்களுக்குக் காட்சி அளித்தாய், ஐயனே.

கடுமையான பயணத்தையும் தாண்டி,
உன்னைக் காணும் வரை
உயிர் இருக்க வேண்டுமே என்று
நான் பரிதவித்தது
உனக்குத் தெரியாதா, அப்பனே?

எல்லாத் தடைகளையும் தாண்டி
உன்னைத் தரிசித்து,
அகமகிழ்ந்து,
பிறவிக் கடனை அடைந்தோம்
என்று நினைத்தோமே.
நீ உருகிக் காட்சி அளித்தது,

"மகளே! உன் வாழ்வு
பட்டுப் போகப் போகிறதே!"
என்று நினைத்துத்தான் என்று
நான் அறியவில்லையே, ஐயனே.

இன்று அந்த நினைவுகளை நினைத்து
அழத்தான் செய்கிறேனேயன்றி,
உன்னை நிந்திக்கச் சிந்தனை கூட
இடம் தர மறுப்பது ஏனோ?
மீண்டும் உன் திருவடியைத்தான்
பற்றுகிறது உள்ளம்.

"நீ குடிகொண்டிருக்கும்
எல்லா இடத்திற்கும் போவோம்"
என்று கூறிய என்னவரை,
"வேண்டாம், நீ என்னிடமே வா"
என்று அழைத்தது ஏனய்யா?

உன்னிடம் கேட்க
வினாக்கள் ஆயிரம் என்னிடம்.
ஆனால்,
பதில் கூறாமல் மௌனம் காப்பது ஏன்?

கடந்த வருடம் நாங்கள் அமர்நாத்தில்.
இப்போது எல்லாம் இழந்த
அபாக்கியசாலியாக.
சந்தோஷத்தைக் கொடுத்த நினைவுகளை
நினைத்து வேதனைப்பட வைத்ததேனோ!

வலிகள் வரிகளாக.

கவிஞர் சுமதி தசரதன், திருவான்மியூர் (சென்னை)

## 1. கேட்டால்தானே?...

யாருமற்ற பொழுதுகளில்

உடம்பையும் புத்தியையும்
அமைதியாய் இரு
என்று சொல்லும்போது

உடம்பு மட்டும்
'சமர்த்துப் பிள்ளையாய்'
அமைதி காக்க
புத்தி மட்டும்

தொடர்பில் இருக்கும்
மனிதரைப் பற்றி
இவர் சரி; அவர் தவறு

கடந்த கால / நிகழ்கால
நிகழ்வுகளைப் பற்றி
சந்தோஷப்படுவதும்
வருத்தப்படுவதும்

எதிர்காலத்தைப் பற்றி
எதிர்பார்ப்பு கொள்ளுவதும்
பயம் கொள்ளுவதும்

என ஏதாவது ஒரு சிந்தனையுடன்...

**********************************



## 2. ஆமாவா? இல்லையா?

வாழ்க்கைப் பயணத்தில்
பல வெற்றிகள் கிடைத்தாலும்
கிடைத்த முதல் வெற்றி

தோல்விக்குப் பின்னே
முயற்சியால் மீண்டாலும்
இழந்தது பற்றிய வருத்தம்

செயல் மேன்மையால்
வசைமொழியை
பின்னர்ப் பாராட்டாய்
மாற்றினாலும்
பெற்ற அவமானம்

நிகழ்கால நிஜங்களில்
நிறைய சந்தோஷங்கள்
இருந்தாலும்
பழையவைகளின் குதூகலம்
மனதின் ஓரத்திலாவது
எப்பொழுதும் இருக்கும்

ஆமாவா? இல்லையா?

அத்தியாயம்-4

# கோர்ட் வளாகத்தில்

(திகில் நவீனம்)

மறுநாள் காலையில் அலுவலகம் வந்ததும் காஷியர் அவனைக் கூப்பிட்டு இரண்டு மூன்று வவுச்சர்களில் கையெழுத்து வாங்கிக் கொண்டு இரண்டு பத்து ரூபாய் கட்டுகளைக் கொடுத்தான்."

தினேஷ் தான் கொண்டு வந்த பையில் பணத்தை வைத்துக் கொள்ள உள்ளே நுழைந்த ராஜன் லால் "ரெடியா தினேஷ். கிளம்பலாமா? என்று கேட்டார்."

"எஸ் சார்"

"கமான்" என்று சொல்லி விட்டு ராஜன் லால் முன்னால் போக தினேஷ் வெளியே வந்தான்.

டா டா சுமோவில் மதன் லாலும் ஒரு வக்கீலும் அமர்ந்திருந்தார்கள். முன்னால் ராஜன் லால் ஏறிக் கொள்ள பின்னால் தினேஷ் ஏறிக் கொண்டதும் ஜீப் கிளம்பியது.

"எந்த ஸ்டுடியோவில் சார். இன்றைக்கு ஷூட்டிங்?"

"ஹை கோர்ட் பக்கத்திலே தினேஷ்."

"கேமரா மேன் மற்ற நடிகர்கள் எல்லாம்...."

"அவர்களெல்லாம் முன்னாலே போயாச்சு."

டைரக்டர் வந்து விவரமாக காட்சியை விளக்குவார் என்று சொன்னீர்கள். அவர் நேற்று லாட்ஜிக்கு வரவேயில்லை."

"இன்றைக்கு சொல்லிக் கொள்ளலாம் என்று நினைத்திருப்பார்."

ஜீப் அந்த கோர்ட் வளாகத்தில் வந்து நிற்க நான்கு பேரும் வந்து இறங்கினார்கள்.

"பையனுக்கு விவரம் எதுவும் சொல்லாமல் அழைத்து வருகிறீர்கள். பிறகு ஏடா கூடமாக நடந்து கொள்ள மாட்டானே" என்று இந்தியில் வக்கீல் கேட்டது கொஞ்சம் கூட தினேஷுக்குப் புரிய வில்லை.

"நீங்கள் கவலையே படாதீர்கள். மதராசிக்கு ஒன்றும் தெரியாது. நான் சொல்கிற மாதிரி ஆடுவான்" என்று இந்தியில் சொல்லி விட்டு "தினேஷ் நீங்கள் நம் காரக்டருக்கு தகுந்தாற் போல் உடை அணிய வேண்டும். வாருங்கள் இந்த டிரஸ்ஸை போட்டுக் கொள்ளலாம்" என்று கோர்ட்டின் ஒரு கோடி அறையில் அவனை சுரேஷ் தேவின் உடையை போட்டுக் கொண்டு வரச் சொன்னார்கள்.

அத்தியாயம்-4

# கோர்ட் வளாகத்தில்

(திகில் நவீனம்)

வக்கீல் உள்ளே போய் விட்டு வந்து "ஜட்ஜ் அரை மணி நேரம் கழித்து வரச் சொல்லியிருக்கிறார்" என்றார் மதன் லாலிடம்.
"ஓ.கே. ஜட்ஜ் எதுவும் கேள்வி கேட்க மாட்டாரே."

"நான் சொல்லி விட்டுத்தான் வந்திருக்கிறேன். சுரேஷ் தேவுக்கு கொஞ்சம் உடம்பு சரியில்லை என்று."
அப்படீன்னா நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாமே என்றார். இல்லை சார் இவ்வளவு தூரம் வந்தாகி விட்டது. அவருக்கு கொஞ்சம் சளி பிடித்து தொண்டை கரகரப்பாகி இருக்கிறது என்றேன். சரி நான் சுரேஷ் தேவைப் பார்த்தால் போதும். அதிகமாக கேள்வி கேட்க மாட்டேன் என்று சொல்லி விட்டார்" என்றார் வக்கீல்.
"வெரி குட். ராஜன் லால் எங்கே?" என்று கேட்ட போது "போகலாமா" என்றவாறு வந்தார் ராஜன் லால்.
அருகில் சுரேஷ் தேவின் உடையில் தினேஷ் நின்று கொண்டிருந்தான்.
உள்ளேயிருந்து வந்த கோர்ட் குமஸ்தா வக்கீலிடம் வந்து "சுரேஷ் தேவைக் கூட்டிக் கொண்டு வரச் சொல்கிறார் ஜட்ஜ்" என்றார்.
நான்கு பேரும் உள்ளே வர "இவர்கள் இருவரும் யார்?" என்று சுரேஷ் தேவ் உடையில் இருந்த தினேஷிடம் கேட்டார் ஜட்ஜ் இந்தியில்.
அவன் வக்கீலைத் திரும்பிப் பார்க்க "மை லார்ட் அவர்கள் இருவரும் சுரேஷ் தேவின் கார்டியன்கள். மிஸ்டர் ராஜன் லால். மிஸ்டர் மதன் லால்" என்று வக்கீல் பதில் சொன்னார்.
ஜட்ஜ் வக்கீலை முறைத்துப் பார்த்துக் கொண்டு எப்படிக் கொண்டு போகப் போகிறீர்கள். இரண்டு பெரிய சூட் கேஸ்களில் போட்டு வைத்திருக்கிறேன்." என்றார் ஜட்ஜ்.
'ரெடி. டேக். ஷாட் ரெடி. கேமிரா மேன் யாரையும் காணவில்லையே. இவர்கள் என்னை ஏமாற்றுகிறார்கள். காலையிலே சந்தேகப் பட்டதும் நேற்று இரண்டு விதமாக விமான டிக்கட் வாங்கியது கூட நல்லதுதான்.' என்று எண்ண ஆரம்பிப்பதற்குள் "நாங்கள் ஜீப்பில் வந்திருக்கிறோம். பத்திரமாக சுரேஷ் தேவ் பங்களாவிற்கு திரும்பிப் போய் விடுவோம்" என்றார் ராஜன் லால் இந்தியில்.

அத்தியாயம்-4

## கோர்ட் வளாகத்தில்

(திகில் நவீனம்)

வக்கீல் உள்ளே போய் விட்டு வந்து "ஜட்ஜ் அரை மணி நேரம் கழித்து வரச் சொல்லியிருக்கிறார்" என்றார் மதன் லாலிடம்.
"ஓ.கே. ஜட்ஜ் எதுவும் கேள்வி கேட்க மாட்டாரே."

"நான் சொல்லி விட்டுத்தான் வந்திருக்கிறேன். சுரேஷ் தேவுக்கு கொஞ்சம் உடம்பு சரியில்லை என்று."
அப்படீன்னா நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாமே என்றார். இல்லை சார் இவ்வளவு தூரம் வந்தாகி விட்டது. அவருக்கு கொஞ்சம் சளி பிடித்து தொண்டை கரகரப்பாகி இருக்கிறது என்றேன். சரி நான் சுரேஷ் தேவைப் பார்த்தால் போதும். அதிகமாக கேள்வி கேட்க மாட்டேன் என்று சொல்லி விட்டார்" என்றார் வக்கீல்.
"வெரி குட். ராஜன் லால் எங்கே?" என்று கேட்ட போது "போகலாமா" என்றவாறு வந்தார் ராஜன் லால்.
அருகில் சுரேஷ் தேவின் உடையில் தினேஷ் நின்று கொண்டிருந்தான்.
உள்ளேயிருந்து வந்த கோர்ட் குமஸ்தா வக்கீலிடம் வந்து "சுரேஷ் தேவைக் கூட்டிக் கொண்டு வரச் சொல்கிறார் ஜட்ஜ்" என்றார்.
நான்கு பேரும் உள்ளே வர "இவர்கள் இருவரும் யார்?" என்று சுரேஷ் தேவ் உடையில் இருந்த தினேஷிடம் கேட்டார் ஜட்ஜ் இந்தியில்.
அவன் வக்கீலைத் திரும்பிப் பார்க்க "மை லார்ட் அவர்கள் இருவரும் சுரேஷ் தேவின் கார்டியன்கள். மிஸ்டர் ராஜன் லால். மிஸ்டர் மதன் லால்" என்று வக்கீல் பதில் சொன்னார்.
ஜட்ஜ் வக்கீலை முறைத்துப் பார்த்துக் கொண்டு எப்படிக் கொண்டு போகப் போகிறீர்கள். இரண்டு பெரிய சூட் கேஸ்களில் போட்டு வைத்திருக்கிறேன்." என்றார் ஜட்ஜ்.
'ரெடி. டேக். ஷாட் ரெடி. கேமிரா மேன் யாரையும் காணவில்லையே. இவர்கள் என்னை ஏமாற்றுகிறார்கள். காலையிலே சந்தேகப் பட்டதும் நேற்று இரண்டு விதமாக விமான டிக்கட் வாங்கியது கூட நல்லதுதான்.' என்று எண்ண ஆரம்பிப்பதற்குள் "நாங்கள் ஜீப்பில் வந்திருக்கிறோம். பத்திரமாக சுரேஷ் தேவ் பங்களாவிற்கு திரும்பிப் போய் விடுவோம்" என்றார் ராஜன் லால் இந்தியில்.

கவிஞர் இரஜகை நிலவன்

அத்தியாயம்-4

## கோர்ட் வளாகத்தில்

(திகில் நவீனம்)

"ஓ.கே. சுரேஷ் தேவ். கையெழுத்திடுங்கள். இவையெல்லாம் என் சுய உணர்வோடும் யாருடைய வற்புறுத்தலில்லாமலும் பெற்றுக் கொண்டேன் என்று எழுதியிருக்கிறேன். வாசித்துக் கொண்டு கையெழுத்திடுங்கள்" என்றார் ஜட்ஜ்.

"நோ பிராப்ளம் சார். நீங்கள் எல்லாம் சரியாகத்தான் எழுதியிருப்பீர்கள்" என்று ஆங்கிலத்தில் பதில் சொன்னார் வக்கீல்.

"ஆமாம்" என்று தலையாட்டினான் தினேஷ்.

"தினேஷ் நான் காலையிலே சொல்லித் தந்த மாதிரி கையெழுத்திடுங்கள்." என்றார் ராஜன் லால் கிசுகிசுப்பாக.

"என்ன எல்லோரும் ஆங்கிலத்தில் பேசுகிறீர்கள். சுரேஷ் தேவிற்கு ஆங்கிலம் புரியாத பாஷையாயிற்றே" என்றார் ஜட்ஜ் குழப்பத்துடன்.

"அது... வந்து... இப்போது கொஞ்சம் கொஞ்சமாக படிக்கப் பழகிக் கொண்டிருக்கிறார் அது தான் அவருக்கும் தொடர்ந்து ஆங்கிலத்திலே பேசக் கற்றுக்கொடுக்கிறோம் " என்றார் வக்கீல்.

"சரி.. சரி.. சுரேஷ் தேவ் இங்கே கையெழுத்துப் போடுங்கள்" என்றார் ஜட்ஜ் ஹிந்தியில்.

அவர் சொன்னது புரிய வில்லை என்றாலும் 'கையெழுத்துப் போடச் சொல்கிறார்' என்று உணர்ந்த தினேஷ் ராஜன் லால் சொல்லித் தந்த மாதிரி 'சுரேஷ் தேவ்' என்று கையெழுத்திட்டான்.

ஜட்ஜ் எழுந்து தினேஷின் கையைக் குலுக்கிக் கொண்டு குமாஸ்தாவிடம் "இவரை அழைத்துச் சென்று பணத்தைக் கொடுங்கள்" என்றார்.

குமஸ்தாவுடன் உள்ளே சென்ற தினேஷ் பணம் நிறைந்த இரண்டு சூட் கேஸ்களையும் எடுத்துக் கொண்டு வேறு வழியாக வெளியே வந்து ஒரு டாக்ஸியில் ஏறி "சி.எஸ்.டி. ஸ்டேஷனுக்கு போப்பா" என்றான்.

டிரைவர் சி.எஸ்.டி. என்பதை புரிந்து கொண்டு "கியா" என்றவாறே வண்டியை எடுத்தான்.

உள்ளே போன தினேஷ் திரும்பி வராமல் குமஸ்தா மட்டும் திரும்பி வர திகைத்துப் போன ராஜன் லால், மதன் லால், வக்கீல் மூவரும் கும்ஸ்தாவிடம் "சுரேஷ் தேவ் எங்கே?" என்று கேட்டனர்.

"அவர் அப்போதே அடுத்த வழியாக போய் விட்டாரே" என்றார் குமாஸ்தா.

"சாலா மதராஸி. நம்மை ஏமாற்றி விட்டானே. சும்மா விடக் கூடாது. இன்று சாயங்காலம் மும்பை -சென்னை டிக்கட் எடுத்திருக்கிறான். ஏதோ ஜெட் ஏர்வேஸ் டிக்கட் என்றான். "வா விடாமல் பிடித்து விடலாம்" என்று ராஜன் லால் கத்த, மதன் லாலும் வக்கீலும் அவர் பின்னால் ஏறக் குறைய ஓடினார்கள்.
மூவரும் ஜீப்பில் ஏறியதும் "டிரைவர் நேற்று அந்தேரியிலே அந்த தினேஷ் மதராஸியை இறக்கி விட்ட டிராவல்ஸ் ஆபீஸிற்கு போ" என்றார் மதன் லால்.

***** ******* ******

சி.எஸ்.டி. ஸ்டேஷனில்இறங்கிய தினேஷ் மறுநாள் புறப்படும் மும்பை — நாகர்கோவிலுக்கு ஒரு ரயில் டிக்கட் எடுத்தான்.
இரண்டு பணம் நிரம்பிய சூட்கேஸ்களுக்கும் பூட்டுகள் போட்டு டிக்கெட்டைக் காட்டி லாக்கர் அறையில் போட்டு விட்டு வெளியே வந்து ஹோட்டல் சிட்டி லாட்ஜில் அறை எடுத்தான். இரவு மட்டும் தங்கிக் கொள்வதற்கு..



**முன்னுரை**



தமிழ் அன்னைக்கு அணிசெய்த அரிய கவிஞர்களுள் ஒருவர் வாணிதாசன். இயற்கையைப் பாடுவதிலும், எளிய சொற்களில் ஆழமான கருத்துகளைத் தருவதிலும் வல்லவர். பாவேந்தர் பாரதிதாசனின் தலைசிறந்த மாணவரான இவர், கவிதை உலகில் தனக்கெனத் தனி வழியை உருவாக்கி, "தமிழ்நாட்டின் வேர்ட்ஸ்வொர்த்" என்று மக்களால் போற்றப்பட்டார்.

**பிறப்பும் கல்வியும்**

வாணிதாசன் 1915-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22-ஆம் நாள் புதுச்சேரியை அடுத்த வில்லியனூரில் பிறந்தார். இவருடைய இயற்பெயர் அரங்கசாமி என்ற எத்திராசலு ஆகும். பெற்றோர் அரங்காத்தன் - துளசியம்மாள். தொடக்கக் கல்வியைப் புதுச்சேரியில் கற்ற இவர், பாவேந்தர் பாரதிதாசனிடம் தமிழ் பயிலும் வாய்ப்பைப் பெற்றார். பாரதிதாசன் மீது கொண்ட அளப்பரிய பற்றின் காரணமாகத் தம் பெயரை "வாணிதாசன்" என்று மாற்றிக்கொண்டார்.

**ஆசிரியர் பணியும் தமிழ்த்தொண்டும்**

இவர் ஆசிரியராகப் பணியாற்றிப் பல மாணவர்களை உருவாக்கியவர். பள்ளி மாணவர்களுக்குத் தமிழார்வத்தை ஊட்டிய தோடு, எளிய நடை கவிதைகள் மூலம் சமூக விழிப்புணர்வையும் ஏற்படுத்தினார். பிரெஞ்சு மொழியிலும் புலமை பெற்றிருந்த இவர், தமிழ் மொழிக்கும் பிரெஞ்சு மொழிக்கும் இடையிலான பாலமாகவும் திகழ்ந்தார்.

திரு. அ.வில்சன், இதழாசிரியர்

### வாணிதாசனின் முதன்மைப் படைப்புகள்

**தமிழச்சி:** தமிழ்நாட்டின் பண்பாடு, பாரம்பரியம் மற்றும் வீரம் ஆகியவற்றை விளக்கும் காவியம்.
**கொடிமுல்லை:** இயற்கை எழிலையும் காதலையும் மையமாகக் கொண்டு எழுதப்பட்ட புகழ்பெற்ற காவிய நூல்.
**தொடுவானம்:** இயற்கை வர்ணனைகள் நிறைந்த சிறப்பான கவிதைத் தொகுப்பு.
**எழிலோவியம்:** இயற்கையின் எழிலைக் கவிதைகளாகச் சித்தரிக்கும் படைப்பு.
**குழந்தை இலக்கியம்:** சிறுவர்களுக்காக எளிய சொற்களில் இயற்றப்பட்ட இனிய பாடல்கள்.

### இயற்கைக் கவிஞர்

ஆங்கிலக் கவிஞர் வேர்ட்ஸ்வொர்த் (Wordsworth) இயற்கையை எவ்வாறு காதலித்துப் பாடினாரோ, அதேபோல் வாணிதாசனும் இயற்கையின் ஒவ்வொரு கூறுகளையும் (மழை, ஓடை, காடு, பூக்கள்) கவிதையாக்கினார். இதனால் இவர் "தமிழ்நாட்டின் வேர்ட்ஸ்வொர்த்" என அன்போடு அழைக்கப்பட்டார்.

விருதுகளும் சிறப்புகளும்

| விருது / சிறப்பு | வழங்கிய அமைப்பு / விவரம் |
|---|---|
| செவாலியர் (Chevalier) | பிரெஞ்சு குடியரசுத் தலைவர் வழங்கிய உயரிய விருது |
| பாவலரேறு | தமிழ்நாடு அரசு வழங்கிய சிறப்புப் பட்டம் |
| பாவலர் மணி | தமிழ்ச்சங்கங்கள் மற்றும் அமைப்புகள் வழங்கிய பட்டம் |

திரு. அ.வில்சன், இதழாசிரியர்

### கவிதைச் சிறப்புகளும் கருத்துகளும்

பாரதிதாசனின் பாரதிதாசன் கொள்கைப் பாதையைப் பின்பற்றிய இவர், சமூகத்தில் நிலவிய மூடநம்பிக்கைகள், சாதிய வேறுபாடுகள் ஆகியவற்றை எதிர்த்துக் குரல் கொடுத்தார். அதே வேளையில், தமிழ் மொழியின் சிறப்பு, தாய்நாட்டின் விடுதலை, உழைப்பாளர்களின் உயர்வு ஆகியவற்றைக் குறித்துத் தம் கவிதைகளில் விரிவாகப் பாடினார்.

### முடிவுரை

தன் வாழ்நாள் முழுவதையும் தமிழுக்கும் கவிதைக்கும் அர்ப்பணித்த கவிஞர் வாணிதாசன் 1974-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7-ஆம் நாள் இயற்கை எய்தினார். இயற்கை வர்ணனை, எளிய தமிழ் நடை, சமூகச் சிந்தனை ஆகிய மூன்றையும் தமக்கே உரிய பாணியில் கையாண்ட வாணிதாசனின் கவிதைகள், தமிழ் இலக்கிய வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும்.



திரு. அ.வில்சன், இதழாசிரியர்

நாளை

# நமதே

விதியை நொந்து முடங்கிவிடாமல்

வீறுநடை போடு;

உன் ஓயாத உழைப்பின் முன்னே

விதியும் தன் வழியை விட்டு விலகும்!

அகமும் தமிழே

முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை



தொடர்பிற்கு :

9597887847
8870884969

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa    www.aagaramuthala.com    aagaramuthala@gmail.com